ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2165/14 - 2020 මාර්තු මස 03 වැනි අඟහරුවාදා - 2020.03.03

*2165/14 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 03 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

5 ஆவது திருத்தம்

**இலங்கை விவசாய சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதிய, 2162/10 ஆம் இலக்க, 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதிய, 2146/22 ஆம் இலக்க மற்றும் 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 17 ஆந் திகதிய, 2032/33 ஆம் இலக்க மற்றும் 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆந் திகதிய, 1971/17 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் திருத்தப்பட்ட, 2014 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதிய, 1880/26 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை விவசாய சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றது.*

*அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,*

எம். ஏ. பி. தயா செனரத்,
*செயலாளர்,*
*அரசாங்க சேவைகள் ஆணைக்குழு.*

*2020, பெப்புருவரி 28.*

| தொ.இலக்கம் | பந்தி இலக்கம் | திருத்தியமைக்கப்பட வேண்டிய முறை |
|---|---|---|
| 01 | 10.3.2 | தரம் I இலிருந்து விசேட தரத்திற்கு பதவி உயர்வு வழங்குதல்.பதவி உயர்வு வழங்கும் முறை – விசேட தரத்தின் வெற்றிடங்களின் எண்ணிக்கையில் மூன்று மடங்குக்கு அதிகரிக்காத அளவு எண்ணிக்கையினர் முதலாவது அட்டவணையின் பிரகாரம், வெற்றிடங்களுக்குரிய பிரிவுக்கு / பிரிவுகளுக்கு உரிய தரத்தின் உத்தியோகத்தர்களினது சேவைமூப்பு தொடர் ஒழுங்குக்கு அமைய நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் மேற்படித் தகைமைகள் மற்றும் சேவைமூப்பு பரீட்சிக்கப்பட்டு நிலவும் வெற்றிடங்கள் நிரப்பப்படும். |
| 02 | 11.2 | பணிப்பாளர், மாவட்ட விவசாயப் பணிப்பாளர், மேலதிகப் பணிப்பாளர், பீடைநாசினிகளைக் கட்டுப்படுத்தும் பதிவாளர், பிரதான விவசாய விஞ்ஞானி, பிரதான விவசாய விசேட நிபுணர் பதவிகளுக்கு இலங்கை விவசாய சேவையின் தரம் I இன் உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு, நேர்முகப் பரீட்சையொன்றின் போது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும் புள்ளிகள் வழங்கப்பட்டு பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் திறமை தொடர் ஒழுங்குக்கு அமைய தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.பிரதிப் பணிப்பாளர், பிரதிப் பீடைநாசினிக் கட்டுப்படுத்தும் பதிவாளர் பதவிகளுக்கு இலங்கை விவசாய சேவையின் தரம் I ஆம் உத்தியோகத்தர்களிடமிருந்து மற்றும் தரம் II ஆம் உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சையொன்றின் போது அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் அனுமதிக்கப்படும் புள்ளித் திட்டத்திற்கு அமைய அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் புள்ளிகள் வழங்கி, பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் திறமை தொடர் ஒழுங்குக்கு அமைய தெரிவுகள் மேற்கொள்ளப்படும். |

*03-719*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.